

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.2.2026) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் 32.32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை, சேப்பாக்கம் சமூக மகப்பேறியல் நிலையம் மற்றும் அரசு கஸ்தூரிபா காந்தி தாய்சேய் நல மருத்துவமனை வளாகத்தில் கட்டப்பட்டுள்ள கூடுதல் கட்டடத்தை திறந்து வைத்து, மகப்பேறு மருத்துவ சிகிச்சை வசதிகளை பார்வையிட்டார். இந்நிகழ்வில் அமைச்சர் மா.சுப்பிரமணியன், தயாநிதிமாறன் எம்.பி., மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், மண்டலக்குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு. சுகந்தி இராஜகுமாரி, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர்கள் மரு.சாந்தாராமன், மரு.ஹரிஹரன், சமூக மகப்பேறியியல் நிலையம் மற்றும் அரசு கஸ்தூரிபா காந்தி தாய் சேய் நல மருத்துவமனை இயக்குநர் மரு.என். கே.மகாலட்சுமி உள்பட மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் தாய்மார்கள் உடனிருந்தனர்.





கும்மிடிப்பூண்டி தொகுதி, எல்லாபுரம் ஒன்றியம் ஊத்துக்கோட்டை, அம்பேத்கர் நகர், சமுதாய கூடத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப்பணிகள் சார்பில் சமுதாய வளைகாப்பு விழாவில் கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டசத்து பொருட்களை தலைமை செயற்குழு உறுப்பினரும், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் வழங்கி சிறப்புரையாற்றினர். உடன் ஏ.வி.ராமமூர்த்தி, அப்துல்ரஷீத், அபிராமிகுமரவேல், கே.வி.லோகேஷ், வி.பி.ரவிகுமார், டி.சங்கர், சசிதரன், கோல்டுமணி, சம்சுதீன், மு. தமிழ்செல்வன், ரஹீம், வெங்கடேசன், கோகுல், ஜீவா, ஜெயகணேஷ், லோகேஷ், திரிபுரசுந்தரி, பிரபாவதி, பாபு, அருண், மனோகரன், சந்தோஷ், அப்துல்பரீத், பி.எம்.ஓ.சங்கீதா, சி.டி பி.ஒ.ராஜேஷ்வரி மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## சட்டமன்றத் தேர்தல் :

# 9 வது நாளாக தி.மு.க. விருப்ப மனு விநியோகம்!

## சென்னை – அண்ணா அறிவாலயத்தில் ஏராளமான கழகத்தினர் திரண்டனர்!







சென்னை, மார்ச் 1-

சட்டப் பேரவைத் தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிடுபவர்களுக்கான விருப்ப மனு விநியோகம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் 20.2.2026 அன்று தொடங்கியது.

9வது நாளாக நேற்று (28.2.2026) கழக நிர்வாகிகள், தொண்டர்கள் என ஏராளமானோர் ஆர்வமுடன் விருப்ப மனுக்களைப் பெற்றனர்.

தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தல் ஏப்ரல் மாதத்தில் நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் தி.மு.க. தலைமையில் மெகா கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது. இந்த கூட்டணியில் புதிதாக தே.மு.தி.க. இடம் பெற்றுள்ளது. தொடர்ந்து கூட்டணி கட்சிகளுடன் தி.மு.க. தொகுதிப் பங்கீடு குறித்து அதிகாரப்பூர்வ பேச்சுவார்த்தையை தொடங்கி உள்ளது.

இந்த நிலையில் தி.மு.க. சார்பில் போட்டியிட விரும்புகிறவர்களிடம் இருந்து விருப்ப மனுக்கள் விநியோகம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் கடந்த 20ஆம் தேதி அன்று தொடங்கியது.

9வது நாளான நேற்று (28.02.2026) அண்ணா அறிவாலயத்தில் விருப்ப மனுக்களை தொழிலாளர் அணி செயலாளர் பிடிசிஜி.செல்வராஜ், அண்ணா அறிவாலய மேலாளர் ஆர். பத்மநாபன், கழக இலக்கிய அணி இணைச் செயலாளர் ஈரோடு இறைவன், ஆகியோர் பெற்றனர். அப்போது கழகத்தினர் ஏராளமானோர் விருப்ப மனுக்களை அளித்தனர்.

தற்போது விருப்ப மனுக்களைப் பொறுத்த வரையில் 234 தொகுதிகளுக்கும் பெறப் படுகிறது.

இதே போன்று, தமிழ்நாடு முழுவதும் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஏராளமான தி.மு.க. நிர்வாகிகள், தொண்டர்கள் திரளாக வந்து திரண்டு விருப்ப மனுக்களை வாங்கிச் செல்கின்றனர். ஏராளமானோர் பூர்த்தி செய்த விருப்ப மனுக்களையும் தாக்கல் செய்தனர். விருப்ப மனு விநியோகம் வருகிற மார்ச் 6ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

# கொள்கைத்தேர் நீசெலுத்து!



அஞ்சுகச் செல்வரின் அருந்தவப் புதல்வனே!
அரசியல் செருக்க ளத்தில்
ஆயிரம் நெருக்கடி வந்தாலும் சந்திக்கும்
ஆளுமை மிக்க தலைவா!
செஞ்சுடர்க் கதிர்போலும் வெஞ்சமர்க் களம்காணும்
சிங்கமே! தோளு யர்த்து!
சினவேங்கை நடைபோடும் இனமான வீரர்தம்
சேனையை வழிந டத்து!
கொஞ்சுதமிழ்க் கலைஞரின் நெஞ்சுரம் பெற்றவன்!
குறுக்கிடும் தடைத கர்த்துக்
குரைப்பவர் வசைஅள்ளி இரைப்பவர் நாணவே
கொள்கைத்தேர் நீசெ லுத்து!
வஞ்சகரின் சதிவலை அறுத்தெறி! சிலிர்த்தெழு!
வைகறை இருள்கி ழித்து
வழிகாட்டு! நிலமெங்கும் ஒளியேற்று! தமிழர்தம்
வரலாற்றை நிலைநி றுத்து!

காலத்தின் கொடையான தகவல் தொழில்நுட்பக்
கலையினைப் போற்று கின்றாய்!
கவின்மிகும் ஆட்சியால் உலகத்தின் பார்வையில்
கழகத்தை ஏற்று கின்றாய்!
கோலச்செந் தமிழ்எங்கள் உயிர்,உணர் வென்றுநீ
குறிக்கோளைச் சாற்று கின்றாய்!
கொட்டாவி விடுகின்ற கோழையினை யும், வீரக்
குரிசிலாய் மாற்று கின்றாய்!
மூலத்தை வேர்களின் ஆழத்தைப் பழந்தமிழ்
மொய்ம்பினை உணர்த்து கின்றாய்!
முதுகு வளைந்தவர் தண்டு வடங்களை
முறுக்கேற்றி நிமிர்த்து கின்றாய்!
ஞாலத்தில் இப்படிஓர் தலைவன்,எக் கட்சிக்கும்
நாடெங்கும் வாய்ப்ப தில்லை!
நாளைய வெற்றிக்கும் துணைநிற்கும் தொண்டரின்
நம்பிக்கை தோற்ப தில்லை!

இன்றல்ல! நேற்றல்ல! "எழுபத்தைந் தாண்டுகள்"
இடர்பல கண்ட கழகம்!
ஏச்சுக்கும் திராவக வீச்சுக்கும் அஞ்சாமல்
எதிர்மோதி வென்ற கழகம்!
ஒன்றல்ல! இரண்டல்ல! உடுக்கள்போல் வடுக்களை
உடம்பெங்கும் கொண்ட கழகம்!
உட்பகை, வெளிப்பகை அத்தனையும் தூளாக்கி
உலாவரு கின்ற கழகம்!
குன்றல்ல! மிகப்பெரும் மலைகளை நொறுக்கியே
கோட்டைக்குச் சென்ற கழகம்!
குனியாமல் எவருக்கும் பணியாமல், செம்மாந்து
கோலோச்சி நின்ற கழகம்!
கன்றல்ல நடுதற்கு! விழுதூன்றி வேர்விட்டுக்
காலூன்றி நிமிர்ந்த கழகம்!
காளான் குடைக்குக்கீழ் முளைக்கின்ற புற்களா
கழகத்தை வீழ்த்த முடியும்?

இழுக்காகி மனமெங்கும் அழுக்காகிப் போனவர்,நம்
இயக்கத்தைத் தூற்றி வரலாம்!
"இலட்சிய மறவன்"நின் "நல்லாட்சி" பொறுக்காமல்
எரிச்சலில் பேட்டி தரலாம்!
பழுக்கின்ற இடம்தேடிக் கொழுக்கின்ற பேர்கள்,உன்
பாதையில் முட்கள் இடலாம்!
பரம்பரைக் குணம்விட்டுப் போகாத ஏடுகள், பொய்ப்
பரப்புரை அவிழ்த்து விடலாம்!
வழக்கம்போல் இங்கொரு நரிக்கூட்டம், இருட்டுக்கு
வரவேற்பு மாலை யிடலாம்!
"வானத்துச் சூரியன்" காணாமல் போகும்என
வாலாட்டி ஊளை யிடலாம்!
கிழக்கை வெளுக்கின்ற உதயமே! முழுவீச்சில்
கிளம்பு! நீ முரசு முழங்கு!
கீழ்வானம் சிவக்கட்டும்! பிறந்தநாள் வாழ்த்தொலி
கேட்கட்டும்! எழுச்சி வழங்கு!

எண்ணற்ற களங்கள்!நம் எதிரிகள், துரோகிகள்
இணைகின்ற காட்சி அறிவோம்!
எங்கேயோ ஒளிந்துகொண்டு அம்புகளை நம்மீதில்
எறிகின்ற சூழ்ச்சி அறிவோம்!
கண்ணுக்குள் மணிபோலும் கட்சியை, ஆட்சியைக்
காத்துநீ நடப்ப தறிவோம்!
கைகளில் மலர்கொண்டு திசைகள்உன் வரவுக்குக்
காத்துக் கிடப்ப தறிவோம்!
அண்ணாவைக் கலைஞரை உள்வாங்கிக் கொண்டநின்
ஆட்சியின் மாட்சி அறிவோம்!
அன்னைநம் தமிழுக்கும் தமிழர்க்கும் உனையன்றி
யார்இங்கே காவல்? அறிவோம்!
உண்ணாமல் உறங்காமல் உழைத்திடும்தியாகத்தை
ஒருபோதும் நெஞ்சில் மறவோம்!
உயிர்வேண்டும் என்றாலும் தருவோம்! இறுதிவரை
உன்னோடு நாங்கள் வருவோம்!



**கவிச்சுடர்.**
**கவிதைப்பித்தன்**

### நாளை 2 ஆம் தேதி மாலை நடைபெறுகிறது

## காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட அவசர செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!



காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் நாளை (02.03.2026 - திங்கட்கிழமை) மாலை 4 மணி அளவில், ஆலந்தூர், கத்திப்பாரா மேம்பாலம் அருகில் அமைந்துள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் தா.துரைசாமி தலைமையிலும் மாவட்ட துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி எம்.எல்.ஏ, வரலட்சுமி மதுசூதனன் எம்.எல்.ஏ, து.மூர்த்தி, மாவட்டப் பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், சட்டமன்ற தொகுதிப் பார்வையாளர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள், கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், கழக உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று இக்கூட்டத்தில் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:- வருகின்ற 9.03.2026 அன்று திருச்சியில் நடைபெற உள்ள கழக மாநில மாநாடு குறித்தும்,
சட்டமன்ற தேர்தல் பணிகள் மற்றும் கழக ஆக்க பணிகள்.

**அமைச்சர் தா.மோ.அன்பரசன்**
செயலாளர் - காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

### சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

## மக்கள் முதல்வரின் மனிதநேய விழா!



### 01.3.2026 இன்று நடைபெறும் நிகழ்ச்சிகள் விவரம்!

### அமைச்சர் – மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

***சென்னை, மார்ச்.1-***
***அமைச்சர் - மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு வருமாறு:***

**மனிதநேயம் — 22**
***செந்தமிழ் உணர்வு உதிரத்தில் !***
***திராவிட மாடல் சிகரத்தில் !***
*நாள்: 1.3.2026, ஞாயிற்றுக்கிழமை, காலை: 9.30 மணி*
*இடம்: திருவள்ளுவர் திருமண மண்டபம், பெரியார் நகர்.*
***தலைமை: ஆர்.எஸ்.சித்திக், மாவட்ட அயலக அணி அமைப்பாளர்***
*இரத்ததான முகாமை துவக்கி வைப்பவர்*
*டாக்டர். மோகன் காமேஷ்வரன்*
*ENT சிகிச்சை நிபுணர்*
***அன்புடன்: மாவட்ட அயலக அணி, கொளத்தூர் மேற்குப்பகுதி***

**மனிதநேயம் — 23**
***முதன்மை வளர்ச்சியில் தமிழ்நாடு!***
***முதல்வரை வாழ்த்தும் வடநாடு!***
*நாள்: 01.3.2026, ஞாயிற்றுக்கிழமை, மாலை: 4.00 மணி*



*இடம்: மின்ட், மகாசக்தி ஓட்டல் அருகில்*
*தலைமை: பா.ஜெகதீஷ், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்*
*800 வட இந்தியர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குபவர்*
*திருமதி. பி.கீதாஜீவன்*
*மாண்புமிகு சமூகநலம் -மகளிர் உரிமைத்துறை அமைச்சர் அவர்கள்*
*திரைக்கலைஞர். ரோஜா*
*அன்புடன்: மாவட்ட இளைஞர் அணி, துறைமுகம் மேற்குப்பகுதி*

**மனிதநேயம் — 24**
***சான்றோர் போற்றும் மாண்பாளர்!***
***தமிழ் நிலம் காக்கும் படைவீரர்!***
*நாள்: 1.3.2026, ஞாயிற்றுக்கிழமை, மாலை: 6.00 மணி*
*இடம்: பெரியார் திடல், வேப்பேரி*
*தலைமை: வி. சுதாகர், பகுதி கழகச் செயலாளர்*
*வாழ்த்தரங்கத்தை துவக்கி வைப்பவர்*
*டாக்டர்.எஸ்.ஜெகத்ரட்சகன், எம்.பி*
*கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்*
*வாழ்த்துவோர்*
**பத்மஸ்ரீ.கமல் ஹாசன், எம்.பி**
**(தலைவர் — மக்கள் நீதி மய்யம்)**
*சொல்வேந்தர் திரு.சுகி.சிவம்*
*(இந்து சமய சொற்பொழிவாளர் - எழுத்தாளர்)*
***அன்புடன்: 58, 58அ வட்ட திமுக எழும்பூர் தெற்குப்பகுதி***
*இவ்வாறு அமைச்சர் - மாவட்டச் செயலாளர் பி.கே. சேகர்பாபு அறிவித்துள்ளார்.*

### கா.வீ. தியாகராஜன் தலைமை! வி.சி. மதியழகன் முன்னிலை

## ஈஞ்சம்பாக்கத்தில் 500 பேருக்கு உணவு!

### தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. – எஸ்.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ. வழங்குகின்றனர்!

சென்னை, மார்ச் 1

கழகத் தலைவர் தமிழ்நாட்டின் முதல்வர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கழக இளைஞரணி செயலாளர் அவர்களின் வழிகாட்டுதலின்படி மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மாவட்ட கழகத்தின் செயலாளர் மா. சுப்பிரமணியன் அவர்களின் ஆலோசனைப்படி பகுதி கழக செயலாளர் அண்ணன் மதியழகன் அவர்களின் முன்னிலையில் சென்னை தெற்கு மாவட்ட இளைஞரணி சார்பில் மாவட்டத் துணை அமைப்பாளர் ஈஞ்சம்பாக்கம் கா வீ.தியாகராஜன் ஏற்பாட்டில் 194 -வது (அ) வட்டத்தில் நாளை பிற்பகல் 12:00 மணி அளவில் ஈஞ்சம்பாக்கம் பெத்தேல் நகர் பகுதியில் கழகக் கொடியேற்றி 500 நபர்களுக்கு அசைவ உணவு மற்றும் கருப்பு சிவப்பு நிழல் குடைகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் அக்கா தமிழச்சி தங்கபாண்டியன் அவர்களும் சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் சா அரவிந்த் ரமேஷ் அவர்களும் மாவட்ட இளைஞரணி அமைப்பாளரும் விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஆன ஏ.எம்.வி.வி. பிரபாகராஜா அவர்களும் கலந்து கண்டு சிறப்பிக்கின்றனர்.

இந்நிகழ்வில் வட்டக் கழக செயலாளர் எஸ் கர்ணா மாமன்ற உறுப்பினர் திருமதி விமலா கர்ணா அவர்களும் உடன் மாவட்ட பிரதிநிதிகள் ராஜா தாஸ் மொட்ட கழக நிர்வாகிகள் முனுசாமி, பாலாஜி, திருமதி ரேவதி, தியாகராஜன், வால்டர் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளும் கலந்து கொள்கின்றனர்.